# புலம்பெயர்ந்தோரின் தடுமாற்றங்களும் இடர்களும்

**அம்ஜட் மொகமட் சலீம் எழுதியது**

"யாத்திரீகர்கள் தங்கள் தேசத்திற்கு திரும்ப எத்தனித்தால், அவர்கள் தம் கரையேற எத்தனித்தால், வெறும் பனியையும், அழிவுகளையும், இழந்த தம் அன்புக்குரியவர்களையும், கல்லறைகளின் எச்சங்களையும் மட்டுமே பார்க்க நேரிடலாம்.. வேறெதுவும் இல்லை. நாடோடியெனும் அடையாளம் மறைந்து போனாலும், சொந்த நாட்டிலேயே வேற்றாளாக தனியே அலைந்தபடி! மற்றவர்கள் அன்பின் பாடலை மகிழ்வோடு பாடி மகிழ - நீ மட்டும் தொலைந்து போனவனாய்" என ஒரு பிலிப்பைன்ஸ் நாட்டு கவிதை ஒன்று உள்ளது.

இந்த கவிதையானது இலங்கைக்கு நீண்ட காலத்திற்கு பின் திரும்பி வந்து வசிக்க எத்தனிக்கும் அல்லது முதற்தடவையாக குடிமகனாக வாழ நினைப்பவர்களுக்கு மிகப்பொருத்தமான வர்ணனையாக விளங்குகின்றது. அவர்களுக்கு வழங்கப்படும் அடையாளங்கள் காரணமாக இது மேலும் ஒரு சிக்கலானதொரு விடயமாக மாறும் அபாயம் உண்டு. நீண்ட காலத்திற்குப் பின்னர் நாட்டுக்கு திரும்பி வருபவர்ளை 'திரும்பி வந்தோர்' என்றே அடையாளப்படுத்துகின்றோம். ஆயினும் தமது பரம்பரைகளின் அடிவேரை இலங்கையியாக கொண்மவர்களாக இருந்தும் தற்போது வேறொரு நாட்டை தமது சொந்த இருப்பிடமாகவும், வேறொரு தேசியத்தை கொண்டவர்களாகவும் இருப்பவர்கள் முன் மிகப்பெரும் சவாலொன்று காத்திருக்கின்றது. இவர்கள் 'வெளிநாட்டு வாசிகள்' ('expats') எனப்படுவார்களா அல்லது புலம்பெயர்ந்தோர் ('diaspora') எனப்படுவாரா? இவ்விரு பதங்களுக்கும் குறிப்பிட்ட உட்பொருளும் கல்விசார் கருத்தும் உண்டு. எனினும் இரண்டாவது சொல் பிரிவினையை கொண்டுள்ளதுடன் வலுவானதும் கூட. இலங்கையிலுள்ள பெருமளவானவர்களுக்கு புலம்பெயர்ந்தோர் எனப்படுபவர்கள் சந்தேகத்திற்குரியவர்கள் மற்றும் கெட்டவர்கள் என்ற எண்ணம் உண்டு. மோதல் மற்றும் மோதலுக்கு பிந்திய சர்வதேச மதிப்பாய்வின் அடிப்படையில், புலம்பெயர்ந்தோர் எனப்படுவோர், ஒரு தொகுதியாக, நாட்டினை அளிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன், அதன் அங்கத்தவர்களை அதற்கு ஏற்றாற்போல் வசமாக்கியபடி வாழும் குழுவினராக அடையாளம் காணப்படுகின்றனர். இதன் விளைவாக, புலம்பெயர்ந்தோர் இலங்கையின் கேடயத்திற்கு அச்சுறுத்தலளிக்கும் ஒரு விடயதாக திகழ்கின்றனர்.

இதன் காரணமாக இலங்கையிலுள்ளவர்களை பொறுத்தவரை "புலம்பெயர்ந்தோர்" என்ற வார்த்தையை உபயோகித்து கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்வது அநேகருக்கு சிரமமான விடயமாகவே உள்ளது. இந்த சமூகத்திலிருந்து வரும் ஒரு நபர் என்ற ரீதியில் சர்ச்சைக்குரிய தன்மை கொண்ட இந்த சொல், புலம்பெயர்ந்தோர் கொண்டுள்ள பாதுகாப்பின்மை மற்றும் அடையாளமின்மை ஆகியவற்றுக்கு மேலும் வலுச்சேர்க்கின்றது. உங்களுக்கு தெரியும், எம்மில் ஏராளமானோர் வேறு நாடுகளில் பிறந்து வளர்ந்து, அந்த நாடுகளின் தேசியம் மற்றும் குடியுரிமை ஆகியவற்றை கொண்டிருந்தாலும் பெரும்பாலும் பாரம்பரியமான இலங்கையின் கலாசார மற்றும் சமய முறைகளின் அடிப்படையிலேயே வளர்க்கப்பட்டவர்களாகின்றோம். எமது பாரம்பரிய விழுமியங்களை 'இழந்து' விடாதிருக்கும் முயற்சியில் எமது பெற்றோர் இலங்கையின் முறைமைகள் குறித்த வெளிப்படுத்தல்களை மேற்கொள்ள மிகுந்த பிரயத்தனத்தை எடுத்து வந்துள்ளனர். ரொமேஷ் ரங்கநாதனின் Asian Provocateur' என்ற அவரின் தாயாரினால் காண்பிக்கப்படும் தீவிரம் குறித்த தொடரின் குறைந்த பாதிப்பினைக் கொண்ட பதிப்பினை நினைத்துப்பாருங்கள். நம்மில் பலர் இலங்கையராக இருத்தலின் பல்வேறு சங்கடங்களை எதிர்கொண்டவாறே வளர்ந்துள்ளோம். இலங்கையில் வாழ்தல் போன்ற ஒரு வாழ்க்கையை எம் பெற்றோரின் வாழ்க்கை ஊடாக அவர்களின் விழிகள் ஊடாகவே நாம் வாழ்கின்றோம் (இந்நிலையானது மக்கள் எதிர்மறை எண்ணங்களுடன் 'வெறுப்பு' மனப்பாங்கோடு சென்றார்களா அல்லது வித்தியாசமாக 'எதுவும் நடக்காது' என்ற மனநிலையில் சென்றார்களா என்பதைப் பொறுத்தே அமையும்)

எனினும் அடையாளம் மற்றும் அதன் அர்த்தத்திற்கான தேடல்கள் ஆகியன எம்மைப்போன்ற புலம்பெயர்ந்த இரண்டாம் மற்றும் மூன்றாம் தலைமுறையினருக்கு முக்கியத்துவம் வாய்ந்ததும் ஆர்வமூட்டக்கூடிய விடயமாகவும் விளங்கி வருகின்றது. நாம் எங்குள்ளோம் என்பதை நாம்

அறியாதுள்ளோம். நாம் எமக்கு உரித்தானவற்றை தேடுகின்றோம். புலம்பெயர் பின்னணியிலுள்ள மக்களைப் பொறுத்தவரை தொடர்ந்தும் அங்குள்ள நாடுகளின் கலாசாரங்களை செயற்படுத்தல் மேம்படுத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதிலேயே கழிகின்றது. புதிய இல்லம் ஒன்றை அமைத்தல் என்பது வெறுமனே சகிப்புத்தன்மை மற்றும் நட்புறவுடன் இருத்தல் ஆகியவற்றை மட்டும் குறிப்பதில்லை. மாறாக நெருங்குதல் மற்றும் விலகல் ஆகியவற்றிலேயே தங்கியுள்ளது. நாம் தேசியத்தை கொண்டுள்ள நாடுகளின் கலாசாரங்களுடன் இணங்கி வாழ வேண்டும் என்ற தேவை அநேக வேளைகளில் எழுவதில்லை. அங்கும் கலாசாரம், மத நம்பிக்கைகள், உணவு, உடை ஏன், நிறப்பாகுபாடு கூட உண்டு. எமது நாட்டின் பாரம்பரியம் காரணமாக, நாம் பேசும் முறைமையின் காரணமாக, நாம் அந்த நாட்டு கலாசாரத்துடன் பல வேளைகளில் இணங்க முடிவதில்லை. இதன் காரணமாக நாம் அங்கும் நாம் 'எதிரி' 'வேற்றாள்' என்ற பெயர்களை பெறுகின்றோம். இந்த இரட்டை நிலை பல வழிகளையும், கிளைகளையும் கொண்டுள்ளது. உரிமை நிலையானது தாய்நாட்டுடன், .பிறந்த இடத்துடன் உண்மையாகவோ, கற்பனையிலோ மனரீதியான நெருக்கத்தினை எமக்குள் விதைக்கின்றது. இதன் காரணமாக நாம் இவ்வாறான கற்பனை சமூகங்களை உணர்வுகள் மற்றும் நடவடிக்கைகளின் அடிப்படையில் கட்டமைக்கின்றோம்.

இவ்வாறான சமூகங்களை கட்டமைத்தல் ஊடாக குறிப்பிட்ட சில மறைத்தொழிக்க வேண்டிய கட்டுக்கதைகளை நாம் வளர்த்தவாறு இருக்கின்றோம் உதாரணமாக புலம்பெயர்ந்தோர் ஒரே மாதிரியான குணத்தினை கொண்டிருப்பார்கள் என்ற போலி நம்பிக்கை உலவுகின்றது. தலைமுறைகளிக்கிடையில் தோற்றம் பெறும் வேற்றுமைகள் தவிர்த்து சமூகங்களுக்குள்ளும், இடையிலும் பல்வேறு வேறுபாடுகள் காணப்படுகின்றன. சொந்த நாட்டுடன் பாரம்பரிய மற்றும் இருப்பிம் என பன்முக தொடர்புகளைக் கொண்டிருந்தாலும் அரசியல் நிலைப்பாடுகள், அனுபவங்கள் போன்ற பல்வேறு நிலைமைகளின் அடிப்படையில் புலம்பெயர்ந்தோர் மத்தியில் இணைந்து நடக்கும் இயல்பு அரிதாகவே காணப்படுகின்றது. புலம்பெயர் சமூகங்கள் தமது சமூகங்களின் சார்பிலேயே தமது நடவடிக்கைகளை அமைத்துக்கொள்கின்றன. அவர்கள் இந்த சமூகங்களுடன் எவ்வாறு ஊடாடல்களை மேற்கொள்கின்றார்கள் என்பது பல நேரங்களில் உண்மைத்தன்மையை சரியானபடி பிரதிபலிப்பதில்லை என்பது ஒரு புறமிருக்க குறித்த அவர்களது இன குழுக்களுக்கிடையே அவர்கள் மட்டுப்படுத்தப்படுகின்றார்கள் என்பதே நிதர்சனம்.

இதுவே புலம்பெயர் சமூகம் குறித்த இலங்கையோடான அனைத்து கலந்துரையாடல்களுக்குமான (இன மத மற்றும் அரசியல் தொடர்புகள் குறித்த விசாலமான பரப்பின் அடிப்படையில்) ஆரம்ப கருத்தாக்கமாக விளங்க வேண்டும். இலங்கை விவகாரங்கள் தொடர்பில் இலங்கையின் புலம்பெயர் சமூகங்கள் செயற்திறனுடன் விளங்கும் வரை, அமைதியை கட்டமைத்தல், சமரசம் மற்றும் புனருத்தாபனம் ஆகிவற்றுக்கான வாய்ப்புகள் மிகையாகவே உள்ளன. எனினும் கடந்தகாலங்களை நோக்குவோமாயின், இலங்கையின் புலம்பெயர்ந்த அங்கத்தவர்களிடமிருந்து அவசியம் பெற்றுக்கொள்ள வேண்டிய ஈடுபாடானது அநேக வேளைகளில் அசாதாரணமான வகையில் தெளிவின்றியே இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது. முன்னைய அரசாங்கத்தின் பிற்போக்கு நோக்குள்ள மந்தமான செயற்பாடுகளை இதற்கான காரணமாக சொல்ல முடியும். இந்நிலையானது மனித உரிமைகள் குறித்த பரந்தளவிலான காட்டமான விமர்சனங்களை பிரதிபலித்ததுடள், புலம்பெயர் தமிழர்களின் பலம்மிகுந்த குரல் வெளிப்பாட்டினையும் எதிர்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தை உண்டுபண்ணியது. புதிய அரசாங்கமானது, புலம் பெயர்ந்து வாழும் ஆர்வம் செலுத்தும் குழுவினருடன் மீள்அபிவிருத்தி மற்றும் புனருத்தாபன முயற்சிகள் குறித்து கருத்துகளை பகிர்ந்து பழைய நிலையை மாற்றுவோம் என்ற வாக்குறுதியை அளித்துள்ளது.

இது நீண்டகாலமாக ஒதுக்கப்பட்ட நிலையில் விரக்திமனப்பாங்கினை கொண்டுள்ள புலம்பெயர்ந்து வாழும் மக்கள் மத்தியில், தம்மாலும் பங்களிப்பினை அளிக்க முடியும் என்ற நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. எனினும் புலம்பெயர்ந்தவர்களுடன் ஈடுபாட்டை கொள்ளவிருக்கும் அரசாங்கமானது பல விடயங்கள் குறித்து அறிந்திருக்க வேண்டியது அவசியமாகின்றது:

1) இலங்கையுடன் புலம்பெயர் சமூககங்கள் கொண்டுள்ள பன்முக மனக்குறைகள் குறித்து அறிந்திருத்தல். இலங்கையின் பல்வேறு சமூகங்கள் பன்முக காரணங்களுக்காக (விரும்பியோ விரும்பாமலோ) இலங்கையை விட்டு புலம் பெயர்ந்துள்ளன. இவர்கள் தாம் நீங்கி வந்த நாடு குறித்த வித்தியாசமான கண்ணோட்டத்தையும், மனப்பாங்கையும் கொண்டுள்ளனர். இவை குறித்து சிறப்பான புரிந்துணர்வை பெற்றுக்கொண்டதன் பின்னரே அவர்களையும் ஈடுபடுத்தல் குறித்து கவனம் செலுத்த வேண்டும்

2) பன்முக வித்தியாசங்களை கொண்ட பல்வேறு புலம்பெயர் சமூகங்களை புரிந்து கொள்ளல் மற்றும் அவர்களின் கண்ணோட்டத்தில் வெளிப்படும் பாரிய வலுமிக்க கருத்துகளை தெளிவாக ஏற்றுக்கொள்தல் ஆகியன முக்கியத்துவம் பெறுகின்றன. புலம்பெயர் சமூகங்கள் தமது அனுபவம் மற்றும் கண்ணோட்டங்களையே பிரதிபலிக்கின்றன. அவர்கள் தமது பாரம்பரிய நாட்டில் வதியும் மக்களின் அனுபவங்கள், உள்நாட்டு சமூகம் மற்றும் அரசியல் சமூகம் ஆகியவற்றின் உணர்வுகளையும் கருத்துகளையும் பிரதிபலிப்பதில்லை. அத்துடன் அவர்கள் இன்னும் தமது சொந்த பரம்பரை நாடான இலங்கையுடன் விசேட தொடர்பினைக் கொண்டிருப்பதுடன், அரசியலாகட்டும், பொருளாதார அல்லது அபிவிருத்தியாகட்டும், ஏன் மனித நேய அல்லது பிற விடயங்கள் குறித்து குறிப்பிடத்தக்க தாக்கத்தினை மேற்கொள்வதற்கான ஆற்றலை அவர்கள் கொண்டிருக்கின்றார்கள்.

3) அனுபவங்கள் குறித்த தலைமுறை பிரிவுகளையும், ஒரே குடும்பத்திற்குள்ளேயே நிலவும் பன்முக போக்குகள், மனநிலை மற்றும் செயல்நோக்கங்களை கண்டறிதல் மற்றும் தனிப்பட்ட சவால்கள் மற்றும் உத்வேகங்களை அறிந்து கொள்தல்

4) பல்வேறு புலம்பெயர் சமூகங்கள் இலங்கையில் வாழ்ந்த காலகட்டத்தினை விட, புலம்பெயர் நாடுகளில் பிரிந்தே உள்ளன (நம்பிக்கைகள் மற்றும் சமூக கட்டமைப்புகள் அடிப்படையில்). இவ்வாறு பிரிந்துள்ளோருக்கு அங்கீகாரமும் வாய்ப்பும் அளிக்கப்படுவதோடு, நியாயமான, அர்த்தபூர்வமான கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்

5) உண்மையான தேவைகள், இடைவெளிகள் ஊக்கங்கள் குறிப்பிட்ட சமூகங்கள் மத்தியில் கட்டமைக்கப்பட வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு சமூகங்களும் ஈடுபாட்டை ஆரம்பிக்க விளையும் சிக்கலான காலகட்டத்தில், அவர்கள் குறித்த சரியான ஊகங்கள் மற்றும் நம்பிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இது புலம்பெயர் மக்களுக்கு பரந்த யதார்த்தமிகுந்த வாய்ப்பிளை அளிக்கும்

6) புலம்பெயர் நோக்கிலிருந்து பார்க்கையில், இலங்கை குறித்த கண்ணோட்டங்கள் மாறுபாடடைவதைப்போலவே, இலங்கையின் நோக்கிலிருந்து புலம்பெயர்ந்தோர் குறித்த பார்வையும் மாறுபடுகின்றது. இலங்கையில் புலம்பெயர்ந்தோர் குறித்து நிலவும் இந்த மாறுபட்ட கருத்துகள் குறித்த தெளிவு ஏற்படுத்தப்பட்டு அது களையப்பட வேண்டும். நாட்டிலுள்ள சிவில் சமூகத்தினர், கோட்பாடுகளை உருவாக்குபவர்கள் மற்றும் புலம்பெயர் சமூகங்கள் ஆகியோர் மத்தியில் மேலதிக வெளிப்படையான கலந்துரையாடல்களுக்கான இடம் ஒதுக்கப்பட வேண்டும். அத்துடன் உள்நாட்டு சமூகத்தினர் புலம் பெயர் சமூகத்தினர் ஆகியோர் மத்தியில் தொடர்புகள் பேணப்படல் வேண்டும்.

புலம்பெயர் நாடுகளில் உள்ள மக்களை பொறுத்தவரையில், அவர்கள் இலங்கை மோசமான நிலையில் உள்ளது, அதற்கு முழுமையான மீளாக்கம் தேவை என்ற முடிவினை எடுத்து, அதில் ஈடுபாடு காட்டுவதா இல்லையா என்பது இலகுவானதாக உள்ளது. ஆயினும் குறித்த இந்த சவால்கள் மற்றும் வீழ்ச்சிகளை ஏற்றுக்கொள்வதும் அதனை மேம்படுத்துவதற்கான

சாத்தியங்களை அடையாளம் கண்டுகொள்வதும் மிகுந்த கஷ்டமான காரியமாக உள்ளது. எனது நாடான இலங்கைக்கு மீண்டும் திரும்ப வந்து, எமது பெற்றோரின் பாரம்பரியத்தை கட்டிக்காக்கும் வகையில் எம்மாலியன்றதை என் நாட்டுக்கு கொடுக்க வேண்டும் என நினைக்கும் என் போன்ற புலம்பெயர்ந்து வாழும் பலரது இக்கட்டான சூழ்நிலையாகும். அநேகமானோர் ஏனைய நாடுகளில் கடைப்பிடிக்கும் வாழ்க்கைத்தரத்தினை (பல சமயங்களில் அதிக பெறுமதி கொடுத்து) மற்றொரு தரத்திற்கு செல்வதற்கு  செலவிடுகின்றனர். எம்மாலும் எம்மாலியன்ற பங்களிப்பினை அளிக்க முடியும், அளிக்க வேண்டும் என்ற காரணத்தினாலேயே இதனை செய்கின்றோம். இது என்னைப் பொறுத்தவரையில் இரு சாராருக்கும் அனுகூலத்தை அளிக்கும் நம்பிக்கையை தரும் வகையில் மேம்படுத்தக்கூடிய சந்தர்ப்பமாகவே நான் கருதுகின்றேன். எம்மைப் போன்ற பல புலம்பெயர்ந்தவர்களுக்கு சொந்தங்களை சேர்வதே இலக்காகும். இதுவே புலம்பெயர்ந்தவர்கள் தமது வேற்றுமையை மறந்து ஒற்றுமையாக நாடும் பொது விடயமாகும். எமக்கு உரித்தானவற்றை பெறும் நோக்குடன் எமது திறன்கள், அறிவாற்றல் ஏன் எமது நிதியினையும் நாம் அளிக்க தயாராகவே உள்ளோம். பொதுவான எதிர்காலத்தை நோக்கி பயணிக்கும் இலங்கையானது, எமது இந்த குறிக்கோளின் ஊடாக பல நன்மைகளை பெற்றுக்கொள்ள முடியும்

*(அம்ஜட் தென்னாசிய விவகாரங்கள் குறித்த ஆய்வாளராக விளங்குகின்றார் (குறிப்பாக முழுமையான இலங்கை விடயங்கள் குறித்த ஆய்வுகளை மேற்கொள்கின்றார்). மனிதநேய மற்றும் மேம்பாட்டு சிக்கல்கள், அமைதியை கட்டமைத்தல், கலந்துரையாடல்களில் நம்பிக்கையை பெற்றுக்கொள்தல் ஆகிய பரப்புகளில் சிறந்த நிபுணத்துவத்தை இவர் கொண்டுள்ளார். இன்டர்நஷனல் அலர்ட் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் தேசிய தலைவராக இவர் தற்போது கடமையாற்றுகின்றார். லண்டனை தளமாகக் கொண்ட 21ம் நூற்றாண்டுக்கான கற்றல் நிகழ்ச்சித்திட்டத்தின் சர்வதேச ஃபெலோ அங்கத்தவராகவும் இவர் விளங்குகின்றார்)*